# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.ஃபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 14 - 05 - 2017 இதழ் 25

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி

**சனி** மாலை 6:00மணி மற்றும் மாலை 7:30மணி

**ஞாயிறு (ஆங்)** காலை 7.30மணி,11.30மணி மற்றும் மதியம் 1:00மணி

**ஞாயிறு (தமிழ்)** காலை 9:30மணி மற்றும் மாலை 6:30மணி

**பொது விடுமுறை** காலை 9:00மணி (ஆங்) காலை10:00மணி(தமிழ்)

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு** ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பாஸ்கா 5ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :** திப : 6:1-7

**பதிலுரைப் பாடல் :**
திபா : 33:1-2.4-5.18-19.

**பல்லவி :** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக!

**இரண்டாம் வாசகம்:**1 பேதுரு 2:4-9

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
“அல்லேலூயா அல்லேலூயா! வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை, என்கிறார் ஆண்டவர், அல்லேலூயா.”

**நற்செய்தி வாசகம்:** யோவான் 14:1-12

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

# அனைத்து அன்னையருக்கும் பங்கு தந்தையரின் அன்னையர் தின நல்வாழ்த்துக்கள்

## புனித வின்செண்ட் தே பவுல் சபை

புனித வின்செண்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $3,376.45 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

இம் மாதம் புனித வின்செண்ட் தே பவுல் சபையின் வழியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $5,860.00 வெள்ளிகள்.



## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

தேதி : ஞாயிறு, 21-05-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30மணி முதல் 4.00மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த
தன்னார்வலர்களை அன்போடு
அழைக்கின்றோம்.

## ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா - திருப்பலி நேரங்கள்



நாள் : புதன்கிழமை, 24 - 05 - 2017
நேரம் : மாலை 6:30 மணிக்கு (ஆங்கிலம்)

நாள் : வியாழக்கிழமை, 25 - 05 - 2017
நேரம் : மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணிக்கு (ஆங்கிலம்)
மாலை 8:00 மணிக்கு (தமிழ்)

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிந்தனை

அன்புடையீர்,
இன்று பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு. 'நானே உங்களுக்கு எல்லாம்' என்று இறைமகன் இயேசு ஆணித்தரமாகத் தன் வார்த்தைகள் மூலம் தன் உடனிருப்பைப் பதிவுச் செய்யும் இன்று கிறிஸ்துவின் சீடர்களாய் ஆலயம் வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

யோவான் நற்செய்தியில் இயேசு ஏழு முறைத் தன்னைப் பற்றி "நானே..." என்ற வாக்கியங்களைக் கூறியுள்ளார். எனினும் நம் அனைவரின் உள்ளங்களில் ரீங்காரமிடும் மிகவும் பிரபலமான இயேசுவின் வாக்கியமாய் இன்றைய நற்செய்தியில் ஒலிக்கும் "வழியும், உண்மையும், வாழ்வும் நானே..." என்ற வாக்கியம் என்றால் அது மிகையாது.. இயேசு தன்னைப்பற்றிக் கூறிய "நானே..." வாக்கியங்களை ஆழ்ந்து ஆராய்ந்துப் பார்த்தால், எல்லாமே எதிர்ப்புகள், குழப்பங்கள் மத்தியில் இயேசு கூறிய வார்த்தைகள் என்பதை உணரலாம். தன்னைச் சுற்றிப் போராட்டமும், குழப்பமும் நெருக்கும்போது ஒருவர் "நான் இப்படிப்பட்டவன்" என்று கூறுவதில் நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். இயேசு இன்று அத்தகைய பாடங்களை நமக்குச் சொல்லித் தருகிறார்.

இது மே மாதம். வாழ்வுப் பாதைகளை, பயணங்களைத் தீர்மானிக்கும் நேரம் இது. பலருக்கு வேலை மாற்றம், இடம் மாற்றம், வீடு மாற்றம், கல்விக்கூட மாற்றம் என்று பல மாற்றங்களைச் சந்திக்கும் சூழல்கள் எழுந்திருக்கலாம். பல்வேறு பாதைகள் குறுக்கும் நெடுக்குமாக நம் வாழ்வில் தெரியும்போது, இறைவன் சரியான வழியை, சரியான திசையை நமக்குக் காட்டவேண்டும் என்று நம் வழியும், உண்மையும், வாழ்வும் ஆன உயிர்த்த ஆண்டவரிடம் இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |


**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore


அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.